**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**
**STC.NO-155/2024**
**Dated :24.11.2025**
**Deposition of witness for : P.W.1**

**Cross Examination of PW1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சிவக்குமார் | வயது | : | 55 |
| தந்தை பெயர் | : | ரெத்தினம் | தாலுகா | : | கந்தர்வகோட்டை |
| கிராமம் | : | அரவம்பட்டி | தொழில் | : | விவசாயம் |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.
**Accused present. Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**
**Aadhar Card of the Witness verified.**

(எதிரி ஆஜர்)
**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1) நான் B.Com படித்துள்ளேன். ம.சா.ஆ.1 காசோலையை பொறுத்து தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். ம.சா.ஆ.1 காசோலையில் கையொப்பத்திற்கு கீழே, Sirajudeen.V, Noorjahan.S என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனவே, அந்த காசோலை மேற்படி இரண்டு நபர்களுக்கான கூட்டு வங்கிக்கணக்கிற்கு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கசோலையில் ஒரு நபர் தான் கையொப்பம் செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. காசோலையில் யார் கையொப்பம் செய்தது எனக்கு தெரியாது என்றால் சரிதான், நூர்ஜகான் தான் காசோலை கொடுத்தார். (சாட்சி தற்போது தாமாக நூர்ஜகான் காசோலையில் கையொப்பம் செய்து கொடுத்தார் என்று சொல்கிறார்) நான் சிராஜூதினுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

2) காசோலை என் முன்பாக பூர்த்தி செய்யப்பட்டதாக நான் சொல்கிறேன் என்றால் சரிதான். காசோலையை பூர்த்தி செய்து கையொப்பமிட்டது நூர்ஜகான் தான் என்று நான் சொல்கிறேன் என்றால் சரிதான். ஒரே பேனாவால் பூர்த்தி செய்து கையொப்பமிட்டார் என்றால் சரிதான். கம்பன் நகரில் உள்ள பழனிவேல் என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. எதிரி நான் அனுப்பிய அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பில் எதிரி விஜயா,க/பெ. பழனிவேல் என்பவர் பற்றி குறிப்பிட்டுள்ளார் என்றால் நான் அதை கவனிக்கவில்லை. பதில் அறிவிப்பில், வழக்கு காசோலை விஜயா என்பவரிடம் சீட்டு

பணத்திற்கு செக்யூரிட்டியாக கொடுக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் அது பொய்யாக சொல்லப்பட்டுள்ளது. மேற்படி விஜயா செக்யூரிட்டிக்காக கொடுக்கப்பட்ட காசோலையை என்னிடம் கொடுத்து, அதனை வைத்து நான் அறிவிப்பு அனுப்பியதாக பதில் அறிவிப்பில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்கு பிறகு, நான் விஜயா மற்றும் பழனிவேல் குறித்து, தெரிந்து கொள்ள விரும்பவில்லை என்றால் அது பொய்யான தகவல் ஆகும், அந்த நபர்கள் யார் என எனக்கு தெரியாது. அதனால் நான் தெரிந்து கொள்ளவில்லை.

3) எதிரி என்மீதும் மேற்படி விஜயா, பழனிவேல் மீதும் மாவட்ட காவல் துணைக்கண்காணிப்பாளிரிடம் புகார் அளித்து, அந்த புகார் புதுக்கோட்டை நகர காவல் நிலையத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டு, அதன் அடிப்படையில் விசாரணை செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியவில்லை . விஜயா, பழனிவேல் ஆகியோர்கள் காவல் நிலையத்திற்கு வரவழைக்கப்பட்டு, விசாரணை செய்யப்பட்டார்கள் என்றாலும் நான் அதற்கு முன்பாக நீதிமன்றத்தில், வழக்கு தாக்கல் செய்துள்ளதாக கூறி தப்பித்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் எத்தனை காசோலை வழக்குகள் நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இந்த வழக்கை தவிர பானுமதி என்பவர் மீது STC 7/2023 என வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் மற்றவர்கள் தரும் காசோலையை பெற்று, வழக்கு தாக்கல் செய்வதை வழக்கமாக வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. ரமேஷ் என்பவர் என் நண்பரா என்றால் பழக்கமானவர். இந்த நீதிமன்றத்தை தவிர வேறு நீதிமன்றங்களில் காசோலை வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

4) என்ன காரணத்திற்காக வழக்கு காசோலை திருப்பப்பட்டது என்றால் போதிய பணம் இல்லை என்று திருப்பப்பட்டது. எதிரியின் கணவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் அவரை பார்த்துள்ளேனா என்றால் இரண்டு முறை பார்த்துள்ளேன். அவர் என்ன வேலை செய்து வருகிறார் என்றால் இராணுவத்தில் பணிபுரிகிறார். வழக்கு காசோலை பழைய காசோலை என்றால் சரியல்ல. வழக்கு காசோலையை எதிரி எனக்கு கொடுக்கவில்லை என்றாலும் எனக்கும் எதிரிக்கும் எந்த வரவுசெலவும் இல்லை என்றாலும் சரியல்ல. வழக்கு காசோலை தவிர நான் கொடுத்ததாக சொல்லப்படும் கடனுக்கு வேறு ஆவணங்கள் எதுவும் எதிரியிடம் பெற்றேனா என்றால் இல்லை. எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பினை மறுத்து நான் பதில் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் எதிரி எனக்கு பதில் அறிவிப்பு அனுப்பவில்லை. எனக்கும் எதிரி கொடுத்த பதில் அறிவிப்பு நகல் அனுப்பப்பட்டுள்ளது என்றாலும் நான் இல்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

5) தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் அஞ்சல் ஒப்புகை அட்டையில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **(மேற்படி அஞ்சல் ஒப்புகை அட்டை எ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** எதிரி எந்த வகையில் எனக்கு பழக்கம் என்பது குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் எதிரி எனது அக்கா பாலாமணி என்பவரின் வீட்டிற்கு வருவார்,

அதன் அடிப்படையில் எனக்கு பழக்கம். மேற்படி பாலாமணி என்பவரை எதிரிக்கு யார் என்று தெரியாது என்றால் சரியல்ல. அவரை வழக்கில் சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேன் என்றால் இல்லை. வழக்கு காசோலை எந்த தேதியில் கொடுக்கப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் 05.02.2024 ஆம் தேதி கொடுத்ததாக சொல்லியுள்ளேன். எங்கு வைத்து காசோலை கொடுக்கப்பட்டது என்பதை எனது அறிவிப்பிலும் புகார் மனுவிலும் சொல்லவில்லை என்றால் சரிதான்.

6) நான் இலட்சக்கணக்கில் பணம் வரவு செலவு வைத்துள்ளதால் அதற்கான வரவு செலவு புத்தகம் எதுவும் பராமரித்து வருகிறேனா என்றால் இல்லை. நான் வருமானவரி செலுத்துகிறேனா என்றால் நான் விவசாயி என்பதால் வருமானவரி செலுத்தவில்லை. நான் ரூ.5,00,000/-ஐ எப்படி கொடுத்தேன் என்றால் வீட்டில் இருந்து எடுத்துக்கொடுத்தேன். அந்த பணம் எந்த வருமானத்திலிருந்து வந்தது என்றால் விவசாயத்தில் இருந்து வந்தது, நான் டிராக்டரும் வைத்துள்ளேன். அந்த விவசாய வருமானம் எந்த காலகட்டத்தில் கிடைத்தது என்று குறிப்புகள் ஏதும் உள்ளதா என்றால் இல்லை. எதிரி என்னிடம் பணம் எதுவும் பெறவில்லை என்றாலும் காசோலை எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் எதிரி சீட்டுபணத்திற்காக விஜயா என்பவரிடம் கொடுத்த காசோலையை பெற்று நான் இந்த வழக்கினை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் நான் கோரியுள்ள பரிகாரம் எதுவும் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**ஒப்பம்.என்.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**